27th April 1960]

(ஆ) அதன்மீது அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED: Sir, what is the amount that this State has to raise by way of tax under the Third Five-Year Plan?

THE HON. SRI C. SUBRAMANIAM: It is too early to state that.

SRI A. GOVINDASAMY: மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நமது ராஜ்ய சர்க்கார் கோரியிருக்கும் தொகை எவ்வளவு?

THE HON. SRI C. SUBRAMANIAM: ராஜ்ய சர்க்கார் கோரக்கூடிய கட்டம் இன்னும் வரவில்லை. இப்பொழுது பொதுவாக இந்தியா முழுவதும் எடுத்துக்கொண்டால் எந்த அளவுக்கு இருக்கவேண்டும் என்பது பற்றிப் பரிசீலனையில் இருக்கிறது.

SRI A. VEDARATHNAM: முதலிலே போட்ட திட்டத்தைக் குறைக்க வேண்டும் என்று ஏதாவது மத்திய அரசாங்கத்திலிருந்து நம்முடைய அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: திட்டத்தின் அளவே நிர்ணயிக்கப்படவில்லை. பொதுவாக விவாதம் நடந்துகொண்டிருக்கிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. உயர்த்துவதா தாழ்த்துவதா என்ற பிரச்னை எழுதுவதற்கு இல்லை.

SRI A. GOVINDASAMY: நம்முடைய ராஜ்யத்தின் விஸ்தரிப்பு நிலைமையை அனுசரித்தும், ஜனத்தொகை நிலைமையை அனுசரித்தும், நம்முடைய தென்னாடு ஏற்கனவே இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் போதுமான அளவு கவனிக்கப்படாத நிலைமையை அனுசரித்தும், இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் போதுமான நிதி ஒதுக்கும்படி நம்முடைய ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்துமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: எல்லாம் தவறான அடிப்படையில் இந்தக் கேள்வி கேட்கப்படுகிறது. போதுமான அளவு ஒதுக்கப்படவில்லை என்று ஒவ்வொருவரும் அவரவர்கள் ஏதோ சொல்லிக்கொண்டு இருக்கலாம். ஆனால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நமக்கு நியாயமாக எவ்வளவு கிடைக்க வேண்டுமோ, நியாயமாக நாம் எவ்வளவு செய்ய முடியுமோ அது கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

Primary schools

*833 *Q.*—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of

(i) primary aided schools; and

(ii) fee-levying primary schools; and

(*b*) whether these schools referred to in item (ii) are receiving any help, and if so, the nature of help?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) There were 7,553 aided primary schools on 1st June 1959. Forty-five elementary schools in the State levy fees.

(*b*) The 45 fee-levying schools are not eligible for any sort of grant. They are, however, recognized by the Education Department for academic purposes.